<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 207/2023</u>

<u>**LW: 7, PW: 6**</u>

<u>**29.04.2026**</u>

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க விழுப்புரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண். 648/2026, நாள்:09.04.2026 அன்று அனுப்பபட்ட மின்னஞ்சலின் படி

திரு. Dr. தேவேந்திரன் அவர்கள் காணொலி வாயிலாக விசாரிக்கப்படுகிறார்.

திருமதி. க. தீபா, Head Clerk முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருபவர் இவ்வழக்கின் Remote Point Co-ordinator ஆக முதன்மை மாவட்ட நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது முன்னிலையில் காணொலி மூலம் சாட்சி விசாரிக்கபடுகிறார்.

**விசாரணை தொடங்கிய நேரம் : 03.15 மணி**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. Dr.தேவேந்திரன் | த / பெ. | திரு. ராஜேந்திரன் |
| கிராமம் | : | செய்யாறு | தாலுக்கா | செய்யாறு |
| தொழில் | : | உதவி பேராசிரியர் | வயது | 37 |

<u>**எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திரு. Dr. தேவேந்திரன் என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.**</u>

<u>**முதல்விசாரணை**</u>

நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.10.2020 ந் தேதி அன்று நள்ளிரவு 12.20 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது திருவாரூர் புலிவலம் பகுதியை சேர்ந்த கணேசன் என்பவர் மகன் வெங்கடேஷ் வயது 30, என்பவரை அவரது நண்பர் அழைத்து வந்தார். அவரது

கூற்றுப்படி அவரை அடையாளம் தெரிந்த ஒரு நபர் இரும்பு குழாய் கொண்டு தனது இருப்பிடத்தில் நள்ளிரவு 12.00 மணியளவில் தாக்கியதாக தெரிவித்தார்.

நான் அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுய நினைவுடன் இருந்தார். அவரது இடப்பக்க நெற்றி பகுதியில் 5X2X1 cm அளவிலான வெட்டுக்காயம் இருந்தது. மேற்கண்ட பரிசோதனைகளை நான் 577867 என்ற எண்ணில் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து அவரை மேல் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்து கொள்ளும்படி ஆலோசனை வழங்கினேன். அதன் பேரில் அவர் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை. அதனால் அவரது காயத்தின் தன்மை குறித்து சான்று வழங்க இயலாது என்பதை விபத்து பதிவேட்டில் குறிப்பு எழுதி கையெழுத்திட்டுள்ளேன். **அந்த விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

போலிசார் என்னிடம் பைப்பு, ராடு ஏதேனும் காட்டிக் காயத்தின் தன்மை குறித்து விசாரித்தார்களா என்றால் நினைவில் இல்லை. முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள நபருக்கு ஏற்பட்ட காயமானது கூட்ட நெரிசலில் தானே கீழே விழுந்து அடிப்பட்டாலும் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**விசாரணை முடித்த நேரம் : 03.35 மணி**

காணொலி மூலமாக விழுப்புரம் மாவட்டம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்திலிருந்து திருமதி. க.தீபா, தலைமை எழுத்தர், முதன்மை மாவட்ட நீதிமன்றம் அவர்கள் முன்னிலையில் சாட்சியிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதிலை சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது மின்னஞ்சல் மூலமாக விழுப்புரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு Nodel Officer முன்பு அவரால் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.04.29 17:08:15 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்